பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 09 2026 THURSDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், இந்தியா பிரகாசமான நாடாக ஒளிர்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.
2. செமி கண்டக்டர் துறை பெரும் அளவிலான வாய்ப்புகள் நிறைந்த துறையாக முன்னேறுகிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
3. சத்திஸ்கரில் 2013-ம் ஆண்டு நடத்தப்பட்ட மாவோயிஸ்ட் தாக்குதலில் தொடர்புடைய 10 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
4. சௌதி அரேபியாவின மெக்கா நகர் அருகே நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல் குறித்து, இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.
5. இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது..

--- இனி விரிவான செய்திகள் ---

-----------

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவருக்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், திரு.நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைமையின்கீழ், இந்தியா உலக நாடுகளுக்கிடையே பிரகாசமான நாடாக ஒளிர்வதாக கூறியுள்ளார்.

அத்துடன் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் முக்கியப் பொருளாதார நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

25 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள மின்னணு புரட்சி லட்சக்கணக்கானவர்களுக்கு அதிகாரம் அளித்துள்ளது என்றும் விண்வெளி தொழில்நுட்பம், சுகாதாரம், உட்கட்டமைப்பு, உற்பத்தி ஆகிய அனைத்து துறைகளும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பிரதமருக்கு பிறந்த தின வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவருடைய அர்ப்பணிப்பும், ஈடுபாடும் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

நல்ல உடல் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், நாட்டிற்கு தொடர்ந்து சேவையாற்றுவதற்கான சக்தி ஆகியவற்றை இறைவன் அவருக்கு அளிக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

-----------

நாட்டின் எதிர்கால தொழில்நுட்பத்திற்கு அரசுக்கும் - செமி கண்டக்டர் துறைக்கும் இடையேயான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற செமி கண்டக்டர் துறையை சேர்ந்த உலகளாவிய தலைமை செயல் அதிகாரிகளுடனான கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

திறன் மேம்பாடு, புதுமை கண்டுபிடிப்பு, செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில், தொழில்துறை பெரும் பங்களிக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில், முன்னணிகளில் ஒன்றாக இந்தியா திகழ வேண்டும் என்று பிரதமர் கூறினார்.

செமி கண்டக்டர் துறை பெரும் அளவிலான வாய்ப்புகள் நிறைந்த துறையாக முன்னேறுகிறது என்று அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில் துறைக்கு ஏற்ற வகையில் கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கொள்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் குறித்த கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு தொழில்துறை தலைவர்களை திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, இந்தியாவின் செமி கண்டக்டர் திறன்களை மேம்படுத்துவதற்கான அரசின் தொடர் முயற்சிகளை தலைமை செயல் அதிகாரிகள் பாராட்டினார்கள்.

இந்நிலையில், செமிகான் இந்தியா மாநாட்டை புதுதில்லியில் இன்று பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாட்கள் இம்மாநாடு நடைபெற உள்ளது.

இதில் 600-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

-----------

சத்திஸ்கரில் ஜிராம் பள்ளத்தாக்கு பகுதியில், 2013-ம் ஆண்டு நடத்தப்பட்ட மாவோயிஸ்ட் தாக்குதலில் தொடர்புடைய 10 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கை விசாரித்த ஜக்தால்பூரில் உள்ள சிறப்பு தேசிய புலனாய்வு முகமை நீதிமன்றம் இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

எனினும், இந்த தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2013-ம் ஆண்டு நடைபெற்ற தாக்குதலில், பல்வேறு மூத்த காங்கிரஸ் தலைவரகள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

-----------

சௌதி அரேபியாவின மெக்கா நகர் அருகே நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல் குறித்து, இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், சௌதி அரேபியாவின் இறையாண்மைக்கு உட்பட்ட பகுதிகளின் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும், மக்கள் உயிருக்கும், உட்கட்டமைப்புக்கும் தீங்கு விளைவிக்க கூடிய நடவடிக்கைகளை இந்தியா கண்டிப்பதாக கூறினார்.

அத்துடன், இஸ்லாமியர்களுக்கு மெக்கா நகரம் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் நிலையில், அந்நகருக்கு அருகே நடந்த இந்த சம்பவம் கவலை அளிப்பதாக தெரிவித்தார்.

*விரைவில் அப்பிராந்தியத்தில் அமைதி திரும்பும் என்று இந்தியா நம்புவதாக திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டார்.*

*முன்னதாக, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செலுத்திய ட்ரோனை, தங்களது வான்வழி பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து அழித்ததாக சௌதி அரேபியா தெரிவித்துள்ளது.*

*இதற்கிடையே, மெக்கா நகரை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்தவில்லை என்று ஹவுதி அமைப்பு கூறியுள்ளது.*

-----------

*இந்தியாவின் அணுசக்தி விரிவாக்கம் செய்வதற்கான வழிவகைகள் குறித்து, அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. கிரிஸ் ரைட்டுடன், மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் ஹூஸ்டன் நகரில் விவாதித்தார்.*

*அங்கு நடைபெற்ற எரிசக்தி வளம் குறித்த மாநாட்டிற்கிடையே இச்சந்திப்பு நடைபெற்றது.*

*செயற்கை நுண்ணறிவு, உயர் செயல்திறன் கணினி, தரவு மையங்கள் போன்ற வளர்ந்துவரும் துறைகளுக்கான இந்தியாவின் மின்சார உட்கட்டமைப்பு தேவைகள் மற்றும் அனுசக்தி விரிவாக்க திட்டம் குறித்து, திரு.மனோகர் லால் அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சருடன் விவாதித்தார்.*

-----------

*மகாராஷ்டிராவில் மும்பை-நாசிக் நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில், மும்பையை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.*

*மும்பை ஜோகேஸ்வரி பகுதியை சேர்ந்த அக்குடும்பத்தினர் சென்ற வாகனம் லாரியின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.*

*காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக சகாப்பூர் துணை மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

-----------

*தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பாண்டில், டெங்கு காய்ச்சல் பரவல், வழக்கத்திற்கு மாறானதாகவோ அல்லது அபாயகரமானதாகவோ இல்லை என்று கூறப்பட்டுள்ளது.*

*ஆண்டுதோறும் பருவமழை காலங்களில், தட்பவெட்ப மாற்றங்களின் காரணமாக டெங்கு பாதிப்புகளில், பருவகால மாறுபாடுகள் ஏற்படுவது இயல்பானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*காய்ச்சல் பாதிப்புகளை கண்காணித்து, தேவையான மருத்துவ சிகிச்சையை விரைவாக அளிக்க, அதற்கென சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.*

*காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால், தாமதிக்காமல் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனையை அணுகி உரிய சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.*

-----------

*மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.*

*மனுக்களை விலக்கிகொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.*

*2 தொகுதிகளிலும் அடுத்த மாதம் 6-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.*
*வாக்கு எண்ணிக்கை 9-ம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.*

-----------

*இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.*

*புதுதில்லியில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.*
*3 ஆட்டங்களை கொண்ட இத்தொடரில், இந்தியா முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி உள்ளது.*

----------

*செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி தொடக்க சுற்றில் வெற்றி பெற்றன.*

*உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆடவர் பிரிவில், இந்திய அணி 3-1 என்ற ஆட்டக்கணக்கில் தாய்லாந்தை வென்றது.*

*குகேஷ், சரின், விதித் குஜராத்தி ஆகியோர் தத்தமது ஆட்டத்தில் வெற்றி பெற்றனர்.*
*மகளிர் பிரிவில் இந்திய அணி, 4-0 என்ற ஆட்டக்கணக்கில் டொமினிக்கன் குடியரசை வென்றது.*

*கொனேரு ஹம்பி, வைஷாலி ரமேஷ்பாபு, வந்திகா அகர்வால், சபிதா ஸ்ரீ ஆகியோர் தங்களது ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.*

-----------

*ஆசிய விளையாட்டுப்போட்டியில் டேக்பால் போட்டி இன்று தொடங்குகிறது.*

*இந்திய அணியின் சார்பில், ஆடவர் இரட்டையர் பிரிவில் டெக்லான் மார்ஷல் கோன்சால்வ்ஸ்- முகமது அனஸ் இம்ரான பெக் இணை வியட்நாம் இணையை எதிர்கொள்கிறது.*

*ஜப்பானின் ஐச்சி நகொயாவில் நடைபெற உள்ள இப்போட்டி நண்பகல் மணி 12.30 மணிக்கு தொடங்குகிறது.*

<<<<>>>>